(2) அறிவிப்புகள்.

(அ) ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் மறுநாள் எடுத்துக் கொள்ளப் படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, எ. ஆர். மாரிமுத்து, என். கே. பழனிசாமி, ஜேம்ஸ் ஆகியோர் மதுரையில் ஜனநெருக்கடியில் இறந்தவர்கள் நிகழ்ச்சி பற்றி விவாதிக்க வேண்டுமென்ற ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத் திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லாத காரணத்தால் அது நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அதே பொருள் பற்றித் திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன்வடிவை * அறிமுகம் செய்து, அது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோரு கிறேன்.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, கோவை நகர் மன்றத்தைக் கலைத்து விட்டு தனி அதிகாரியைப் போடுகிற இந்த மசோதாவை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு மன்றத்தின் முன்னால் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் விவா திக்கப்பட்ட மசோதாவின் மூலம் கோவையைத் தவிர மற்ற நகர சபைகளுடைய காலத்தை நீடிக்கின்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்திய அமைச்சர் அவர்கள் கோவையைப் பொறுத்தமட்டில் நகரசபை யைக் கலைத்துவிட்டு தனி அதிகாரியைப் போடுகின்ற மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் ஜனநாயக அமைப்பான அந்த நகரசபையை ஏன் கலைத்து விட்டீர்கள் என்று கேட்பதற்கு

---

* 18—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.